தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 12.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 2706/E/2017**

திரு அந்தோணிசாமி ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திண்டிவனம்,
விழுப்புரம் மாவட்டம் - 604 001. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 25.01.2017 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 02.03.2017 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 06.04.2017 |

******

**ஆணை**

இன்று (12.09.2019) பிற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு அந்தோணிசாமி ஆஜராகவில்லை. மேல்முறையீட்டாளர் 09.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாகத் தனக்கு உடல்நிலை சரியில்லாததால் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லையென்று தெரிவித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு நா.அனந்தசயனன், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 25.01.2017 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் திண்டிவனம் வட்டம், கீழ்நெமிலி கிராம நிர்வாக “அ” பதிவேட்டின் ஒளிநகல்களைப் பக்க எண்ணிட்டு வழங்குமாறும், திண்டிவனம் வட்டம், கீழ்நெமிலி கிராம நிர்வாக வருவாய் தீர்வாய பசலி புத்தகப் பதிவேடு முழுவதுமான ஒளிநகல்களை பக்க எண்ணிட்டு வழங்குமாறும், மேற்படி பதிவேடுகளை நேரில் பார்வையிட அனுமதி வழங்குமாறும் 3 இனங்களில் தகவலாகக் கோரி பொதுத் தகவல் அலுவலர், மேலிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திண்டிவனம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 17.02.2017 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைச் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 02.03.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், சார் ஆட்சியர், சார் ஆட்சியர் அலுவலகம், ஜக்காம்பேட்டை, திண்டிவனம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னரும் பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைக் கட்டணமின்றி வழங்க ஆணையிடுறும் கோரி மேல்முறையீட்டாளர் 06.04.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (12.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 17.03.2019 மற்றும் 10.09.2019 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேல்முறையீட்டாளர் வாக்குமூலம் அளித்துள்ளதாகவும் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

5. பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளர் 10.09.2019 தேதியிட்டுப் பொதுத் தகவல் அலுவலருக்கு அளித்துள்ள வாக்குமூலம் வாயிலாகத் தான் கோரிய இனம் 1-ற்குரிய தகவல் வழங்கப்பட்டுவிட்டதாகவும், இனம் 2 மற்றும் 3-ற்கான தகவலை 15 தினங்களுக்குள் வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது தெரிய வருகிறது. இதனை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

> **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்புக் கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில், இதர அலுவலகப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலருடன் இணைந்து, மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ்**

**தாக்கல் செய்துள்ள 25.01.2017 தேதியிட்ட மனுவில் கோரியுள்ள இனம் 2 மற்றும் 3 ஆகியவவை தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளைத் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 2(j)-ன்படி மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு ஆஜர்படுத்தி, ஆய்வு செய்தபின்னர் தனக்குத் தேவைப்படும் தகவலைக் குறிப்பிட்டுக் கோரும்பட்சத்தில், அதனை ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி வழங்கி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், உத்திரமேரூர் வட்டம் அவர்களுக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 2706/E/2017</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திண்டிவனம்,
விழுப்புரம் மாவட்டம் - 604 001.

**<u>மனுதாரர்</u>**

திரு அந்தோணிசாமி,
த/பெ. காளப்பன்,
ஏந்தூர் கிராமம்,
பிரம்மதேசம் (அஞ்சல்)
மரக்காணம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

Copy to: Judgement File.
*19/09/19*